உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம் ~06 | குரோதி வருடம் பங்குனித் திங்கள் பங்குனி~2025 | பூமி~03



## இலங்கையில் புதிய கல்வி சீர்திருத்தம் உருவாக்க முதல் ஆழமாக சிந்தித்து, திட்டமிடுங்கள்

இலங்கையின் இன்றைய பிரதமர் கல்வித் திட்டங்களில் சில மாற்றங்களை உருவாக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளதை நாம் அறிகின்றோம். இலங்கையில் கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் புதிய புதிய கொள்கைகள் என்று காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் மாற்றங்களை ஏற்படுத்துவதும் அதை நீடித்து நிலைக்க விடாமல் அடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் அதனை மாற்றி அமைப்பதும் நாம் கண்டு கொண்ட உண்மை. எனவே இன்றைய பிரதமர் கொண்டு வருகின்ற புதிய கல்விக்கொள்கை

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

கல்விச்சீர்திருத்தம் எந்தளவு தூரம் நீடிக்கப் போகின்றது அல்லது நிலைத்து நிற்கப் போகின்றது என்பது கேள்விக்குறியே.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு பாரிய கல்வி சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாக அன்று ஆட்சிக்கு வந்த அரசு அறிவித்தது. கலாநிதி கெல்வின் ஆர் டி. சில்வா, என்.எம்.பெரேரா, சிறிமாவோ பண்டார நாயக்கா, கல்வி அமைச்சர் பதுதீன் முஹமட் மற்றும் கல்வியாளர்கள் சேர்ந்து ஒரு புதிய கல்வி மறுமலர்ச்சி ஏற்படுத்துவதாக இலங்கை முழுவதிலும் தேர்தல் பிரசாரங்களில் அறிவித்தார்கள். கூட்டு அரசாங்கமாக பதவிக்கு வந்தவர்கள் ஆறாம் வகுப்பில் இருந்து புதிய கல்வி சீர்திருத்த கொள்கையை அமுல்படுத்த தொடங்கினார்கள். அவர்கள் ஒன்பதாம் தர பரீட்சையிலே ஒரு மாணவன் எச் என் சி அதாவது க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு பதிலாக தேசிய கல்வி சான்றிதழ் பரீட்சை என்று ஒன்பதாம் வகுப்பிலே பரீட்சை எடுப்பதை அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். மேலும் ஆறாம் வகுப்பில் தொழில்நுட்பப் பாடம் இரண்டை சேர்த்துக் கொண்டார்கள்.

எட்டுப்பாடமாக இருந்த பாடசாலை கல்வித் திட்டத்தை பத்துப்பாடமாக மாற்றினார்கள். ஒன்பதாம் வகுப்பு பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் ஒரு பாடத்தை சித்தி பெறாத எந்த ஒரு மாணவனும். உயர்தர வகுப்பு பாடத்தைக் கற்க முடியாது என்ற சட்டத்தை அவர்கள் உருவாக்கினார்கள். 1975 ஆம் ஆண்டு முதன் முதலாக எச்.என் சி பரீட்சை நடைபெற்றது. சில மாணவர்கள் தொழில்நுட்ப பாடத்தில் தோல்வி கண்டார்கள். அத்தகைய மாணவர்களை எச்.என்.சி என்று சொல்லப்படுகின்ற A/L க்கு நிகரான அந்த வகுப்பிலே சேர்த்துக் கொள்ள முடியாது என்று இலங்கை அரசாங்கம் அறிவித்தது. பலகுழப்பங்கள் ஏற்பட்டது. குறிப்பாக மர வேலை, இரும்பு வேலை, மின்சார வேலை, வர்த்தக பாடங்கள், மேலும் சில தொழில்நுட்ப பாடங்களை 1972 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் அறிமுகம் செய்து ஒவ்வொரு பாடசாலைகளிலும் அந்த தொழில்நுட்ப பாடங்களை கற்பிப்பதற்காக பல்வேறு கருவிகளையும், இயந்திரங்களையும் கொடுத்தார்கள்.

1978 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பழைய அரசாங்கத்தினுடைய கல்விக் கொள்கைகளை அவர்கள் மாற்றினார்கள். மீண்டும் க.பொ.த உயர்தர பரீட்சை என்றும் எட்டு பாடங்களில் சித்தி பெற்றால் போதும் என்றும் தொழில்நுட்ப பாடங்கள் கட்டாய பாடங்கள் இல்லை என்றும். புதிய அரசாங்கம் அறிவித்தது. மீண்டும் பாடசாலை கல்வி சமூகத்திலே பெரிய குழப்பம். இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு என்கிற பிரகடனத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 1978 லே ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் பதவி வகித்தபோது இதற்கு முன் இருந்த அரசு உருவாக்கிய அனைத்து கல்வி கொள்கைகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினார். அந்த மாற்றங்கள் சிறிய சிறிய மாற்றங்களுடன் இதுவரை இருந்தது, பெரிய அளவில் மாற்றங்கள் இல்லை. 3/2 பெரும்பான்மை ஆட்சிக்கு வேறு அரசாங்கங்கள் வராததும் அதற்கு ஒரு காரணம்.

தற்போதைய அரசாங்கம் மிகப் பலத்தோடு ஆட்சிக்கு வந்திருக்கின்ற காரணத்தினால் புதிய கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்வது என்று தேர்தல் விஞ்ஞாபனத்திலும். தேர்தலுக்குப் பின்னாலே புதிய பிரதமர் பதவியேற்று கல்வி அமைச்சையும் தனக்கு கீழ் கொண்டு வந்து இந்தக் கொள்கை பிரகடனத்தை வலியுறுத்தி வருகிறார். இது எந்த விதத்திலே சாத்தியமாகப் போகின்றது என்று நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எதுவாக இருந்தாலும் இலங்கையின் கல்விக்கு உதவுகின்ற ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஏனைய உலக நாடுகளின் நிதி நிறுவனங்கள் இலங்கை அரசுக்கு கல்விக்காக செலவு செய்யப்படுகின்ற பணம் பல கோடி வீண் விரயமாக போகின்றது பல தடவை எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இப்போது புதிய அரசாங்கம் இவற்றையெல்லாம் மாற்றிமைக்கின்ற இப்பாரிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 2028 முழுமையாக கல்விக் கொள்கை, சீர்திருத்தம் கல்வி செயற்பாட்டிலே பாரிய மாற்றம் விளைவிக்க போவதாக தொடர்ந்து அறிக்கை விடப்படுகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற கல்வியும், 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தப்பாடான கல்வியும், உலக அரங்கிலே பொருந்தக்கூடிய கல்விக் கொள்கையும் அவசியமாகும். எனவே ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொருவரும் அடிக்கடி கல்வித் திட்டங்களை மாற்றுவதனால் எந்தப் பயனும் இல்லை. எனவே புதிய கல்விக் கொள்கைகளை மாற்றுகின்ற போது எதிர்க்கட்சிகளிலே இருப்பவர்களையும், இலங்கை முழுவதிலும் இருக்கின்ற கல்விமான்களையும், இதில்

இணைத்து ஒருமனதாக சீரான முடிவு எடுக்காமல் ஒரு அரசு அல்லது கட்சி அல்லது ஆட்சியில் இருப்பவர்கள் மாத்திரம் தமக்கு சாதகமாக புதிய கல்விக் கொள்கைகளை அறிமுகம் செய்வோம் என்று வெளிப்படுத்துவார்களேயானால் அது தோல்வியிலேயே முடிவடைந்து விடும்.


இன்றைய நூற்றாண்டுக்கு பொருத்தமான கல்வி அத்தியாவசியமாகும். இன்று இலங்கை பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படுகின்ற கல்வியிலே கூட பாரிய மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. பல்கலைக்கழகம் மரபு சார்ந்த ஒரு கல்வி செயற்பாடாக இல்லாமல் மரபு சார்ந்த கல்வி பாடநெறிகளோடு நவீன யுகத்துக்கு பொருத்தமான பாடக் கல்வியை உள்வாங்க வேண்டும். இலங்கையில் மகிந்தோதய கல்விக் கொள்கைக்கமைய இரண்டாம் நிலை பாடசாலைகள் பலவற்றில் பல லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் மௌனமாக இருப்பதை அரசு உணர வேண்டும்.

இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளிலே அத்தகைய கட்டடங்கள் கட்டப்பட்ட போதிலும் அவை எந்தளவு தூரம் மாணவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனென்றால் அந்த ஆய்வு கூடங்களை தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களை பயன்படுத்தக்கூடிய ஆசிரிய வளம் போதிய அளவு உருவாக்காமல் ஆய்வுக்கூடங்களை கட்டி யது பெரும் தவறு. எனவே புதிய கல்விக் கொள்கைகள் வருகின்ற போதெல்லாம் அதை போதிக்க கூடிய ஆசிரிய வளத்தை உருவாக்கி விட்டுத்தான் பாடசாலைகளிலே அத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இது பற்றிய விமர்சனங்களை கல்விமான்கள் தொடர்ந்து ஊடகங்களுடாக விமர்சித்து, ஆரோக்கியமான ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்க அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.




கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்

# சிவபூமி நிலையங்களில் சிறப்பாக நடைபெற்ற மகாசிவராத்திரி விரத நிகழ்வுகள்






சிவபூமி அறக்கட்டளை அதன் பல்வேறு நிலையங்களில் மகாசிவராத்திரி விழாவை மிகுந்த பக்தி மற்றும் சிறப்புடன் நடத்தி, ஆன்மிக நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

கொழும்பு சிவபூமி நிலையத்தில், பெருமளவிலான பக்தர்கள் கலந்து கொண்டு, சிவபெருமானை வழிபட்டனர். இதேபோல், மட்டக்களப்பு திருமந்திர அரண்மனையில், 108 சிவலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. இந்த அரண்மனையில், திருமூலரின் மூவாயிரம் பாடல்கள் கருங்கல்லில் செதுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.







நாவற்குழி திருவாசக அரண்மனையில், 108 சிவலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. 21 அடி உயர கருங்கல் தேர் அமைக்கப்பட்டுள்ளது, அதில் லிங்க வடிவில் சிவபெருமானும், அருகில் மாணிக்கவாசகரும் செதுக்கப்பட்டுள்ளனர். திருவாசகம் யாவும் கருங்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

கீரிமலை சிவபூமி மடம் மற்றும் முதியோர் இல்லங்களிலும் மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுகள் மூலம், சிவபூமி அறக்கட்டளை ஆன்மிக பணிகளை முன்னெடுத்து, பக்தர்களுக்கு ஆன்மிக அனுபவத்தை வழங்கியது.

## பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை



சுதுமலை நாவலர் என்று போற்றப்பட்ட பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தின் சுதுமலைப் பகுதியில் வாழ்ந்த சிறந்த தமிழ் அறிஞர் மற்றும் கல்வியாளர் ஆவார். 2025 மார்ச் 2ஆம் தேதி காலமானார். அவரது மறைவு யாழ்ப்பாணத்தின் பண்டிதர் மரபில் ஒரு முக்கியமான இழப்பாக கருதப்படுகிறது.

ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள் பல தசாப்தங்களாக பல்வேறு துறைகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து, அவர்களை மிளிர வைத்தார். அவரது மாணவர்கள் பலரும் கல்வி, இலக்கியம், கலை மற்றும் சமயத் துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். அவர் எழுதிய நூல்கள் மற்றும் ஆலய ஊஞ்சற்பாக்கள் அவரது இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. மேலும், அவர் சிறந்த சொற்பொழிவாளராகவும் அறியப்பட்டார். அவரது மறைவு யாழ்ப்பாணத்தின் தமிழ் இலக்கிய மற்றும் கல்வி உலகிற்கு பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

# கோப்பாய் ஸ்ரீ சுப்ரமுனிய கோட்டத்தில் நடைபெற்ற சிவராத்திரி வழிபாடுகள்







2025ஆம் ஆண்டின் மகா சிவராத்திரி விரதம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள கோப்பாய் ஸ்ரீ சுப்ரமுனிய கோட்டம் ஸ்ரீ சாந்திலிங்கப் பெருமான் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலயம், அதன் ஆன்மிக முக்கியத்துவத்திற்கும், பாரம்பரியத்திற்கு பெயர் பெற்றது. பக்தர்கள் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள், மற்றும் பூஜைகளில் கலந்து கொண்டனர்.



# கோண்டாவில் மனவிருத்தி பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் போசாக்கான மதிய உணவு





கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறந்த கல்வி நிறுவனமாக, 2021ஆம் ஆண்டில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வாறு சிறந்து விளங்கும் இப்பாடசாலை, மாணவர்களின் உடல்நலத்தையும், கல்வி முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு, போசாக்கு நிறைந்த மதிய உணவுகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு நிறைந்த உணவுகளை வழங்குவது, அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், கல்வியில் அவர்களின் ஈடுபாட்டையும், திறமைகளையும் அதிகரிக்கிறது. இது, மாணவர்களின் சரியான வளர்ச்சிக்கும், அவர்களின் கல்வி பயணத்திற்கும் முக்கிய ஆதாரமாகின்றது.



கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை, தனது மாணவர்களுக்கு இத்தகைய போசாக்கு நிறைந்த மதிய உணவுகளை வழங்கி, அவர்களின் ஆரோக்கியத்தையும், கல்வி முன்னேற்றத்தையும் உறுதி செய்யும் பணியை தொடர்ந்துவருகிறது. இது, மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், அவர்களின் எதிர்காலத்திற்கும் உறுதுணையாக உள்ளது.

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்திர பொங்கல் நிகழ்வில் பங்குபற்றுங்கள்



வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில், 2025ஆம் ஆண்டின் பங்குனி உத்தரப் பொங்கல் விழா, பாரம்பரியத்தின் மகிமையுடன் நடைபெற உள்ளது. விழா, ஏப்ரல் 4ஆம் தேதி வெள்ளிக்கிழமை “விளக்கு வைப்பு“ நிகழ்வுடன் தொடங்கி, ஏப்ரல் 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை பங்குனி உத்தர நட்சத்திர தினத்தில் நிறைவடையும். இந்நாளில் இரவு நேரத்தில் பாரம்பரிய மடை பண்டம் எடுத்தல் மற்றும் பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும்.






தினசரி நிகழ்வுகளில், காலை 9.00 மணிக்கு நாகேஷ்வரி அம்பிகை சமேத நாகலிங்கேஷ்வரப் பெருமான் மற்றும் நாகதம்பிரான் பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெறும் பின்னர் காலை 11.00 மணிக்கு பூஜைகள், நண்பகல் 12.00 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜைகள் நடைபெறும். அடியார்கள், அர்ச்சனை செய்யும் பக்தர்கள் மற்றும் நேர்த்திக்கடன் செலுத்த விரும்புபவர்கள், விழா காலங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஆலயத்தில் வழிபாடுகளை செய்யலாம். இவ்வேளைகளில், ஆலய தர்மகர்த்தா சபையினர் மற்றும் பரிபாலன சபையினர், வழிபாட்டு மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா, பக்தர்களின் ஆன்மிக அனுபவத்தை செழுமையாக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். அனைவரும் கலந்து கொண்டு, இறையருளைப் பெற அழைக்கப்படுகின்றனர்.

# மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலின் பங்குனித் திங்கள் உற்சவங்கள்



யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தென்மராட்சி பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில், 2025ஆம் ஆண்டின் வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் ஆன்மிக மகிமையுடன் நடைபெற உள்ளது. பங்குனி மாதத்தின் திங்கள் கிழமைகளில் நடைபெறும் இவ்விழா, அம்பாளின் அருளைப் பெறும் முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

2025ஆம் ஆண்டில், பங்குனித் திங்கள் உற்சவம் பின்வரும் திகதிகளில் நடைபெறும்:

1ம் பங்குனித் திங்கள்: 17.03.2025
2ம் பங்குனித் திங்கள்: 24.03.2025
3ம் பங்குனித் திங்கள்: 31.03.2025
4ம் பங்குனித் திங்கள்: 07.04.2025

இந்நாட்களில், அம்பாளுக்கு விசேட பூஜைகள் அதிகாலை 5.00 மணிக்கு உஷத்காலப் பூஜையுடன் ஆரம்பமாகி, காலை மற்றும் மாலை அபிேஷகங்கள், விசேட பூஜைகள், பொங்கல் படையல், அர்ச்சனை ஆகியவை நடைபெறும். இவை, இரவு 9.00 மணிக்கு அர்த்த சாமப் பூஜையுடன் நிறைவு பெறும்.

பக்தர்கள், புனித தீர்த்தக்கேணியில் நீராடி, விரதமிருந்து, பொங்கல், படையல், அர்ச்சனை உள்ளிட்ட தமது நேர்த்திகள் மற்றும் வழிபாடுகளை நிறைவேற்றலாம். இது, அவர்களின் ஆன்மிக அனுபவத்தை செழுமையாக்கும்.

ஆலயத்தில் நடைபெற்று வரும் திருப்பணி வேலைகளுக்கு பங்களிப்பு செய்ய விரும்புவோர், நேரடியாக ஆலய அலுவலகத்தில் அல்லது திருப்பணி உண்டியலில் வழங்கலாம். ஆலயத்தின் பெயரால் திருப்பணி அல்லது பூஜை தொடர்பான நிதி, பொருள் சேகரிப்பிற்கான அனுமதி எவருக்கும் வழங்கப்படவில்லை என்பதை பக்தர்கள் கவனிக்க வேண்டும்.


மேலும் தகவல்களுக்கு, ஆலய தொலைபேசி இலக்கம்: 021-3735259 அல்லது ஆலயத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான madduvilpanriththalaichchiamman.com மூலம் தொடர்பு கொள்ளலாம். அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு, அம்பாளின் அருளைப் பெற அழைக்கப்படுகின்றனர்.

## ’சிதம்பர ஜோதி’ விருது பெற்ற பரத நாட்டிய கலைஞர் ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன்



ஈழத்தமிழர் பாரம்பரியக் கலை பரத நாட்டியத்தில் புகழ்பூத்தவராக விளங்கும் ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன் அம்மையார், சமீபத்தில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் ”சிதம்பர ஜோதி” எனும் உயர் விருதினால் கௌரவிக்கப்பட்டார். இந்த விருதை பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்கள் வழங்கி வைத்தார்.

# மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் 89பேருக்கு கண் வெண்புரை சத்திரசிகிச்சை!




மகா சிவராத்திரி பெருவிழாவை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவில் முற்றிலும் இலவசமாக இன்றைய தினம் 89 ஏழை நோயாளர்களுக்கு கண் வெண்புரை அகற்றல் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இவர்களில் 52 பேர் கிளிநொச்சி மாவட்டத்தினையும், 37 பேர் யாழ் மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள்.

சிவன் எல்லையில்லாப் பெருஞ்சோதியாகத் தோன்றி பிரம்மாவுக்கும், விஸ்ணுவுக்கும் அருள்புரிந்து உலக மக்களுக்கு உய்வுண்டாக்கிய சிவராத்திரி நன்னாளில் அயர்லாந்தின் SONYA LYNCH நினைவு நிதியத்தின் பங்களிப்பில் கண் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணர் ஆ.மலரவனின் தலைமையில் கண் விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் அணியினரால் இந்த நற்பணி மேற்கொள்ளப்பட்டமை பாராட்டுக்குரியது.

இந்த வருட ஆரம்பம் முதல் இன்றுவரை மிகுந்த வளப்பற்றாக்குறைகளின் மத்தியிலும் யாழ் போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவில் 1925 கண் வெண்புரையகற்றல் சத்திர சிகிச்சைகளும் 250 இதர சத்திரசிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பக்தி பூர்வமாக நடைபெற்ற நகுலேஸ்வர பெருமான் மகோற்சவம்








யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்தில், 2025 ஆம் ஆண்டின் வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழா, சிவராத்திரி விரதத்தைத் தேர்த் திருவிழாவாகக் கொண்டு, கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் மகோற்சவம் சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, சிவராத்திரி சிறப்பு பூஜைகள் மற்றும் தீர்த்தோற்சவம் போன்ற நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றன. பெருமளவு பக்தர்கள் பல பகுதிகளிலும் இருந்து வருகை தந்து நகுலேஸ்வர பெருமான் திருவருளை பெற்றனர்.



# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஒளிப்படக்கலையகத்திற்கு உபகரணங்கள் அன்பளிப்பு





யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், பழைய மாணவருமான அமரர் சிவயோகநாதன் அவர்களின் நினைவாக, அவரின் நான்கு புதல்வர்கள் கல்வியின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஒளிப்படக்கலையகத்திற்கு நவீன கருவிகள் மற்றும் உபகரணங்களை அன்பளிப்பு செய்தது, அவர்களின் தந்தையாரின் கல்வி மற்றும் கலைப் பற்றும் தொண்டு மனப்பான்மையையும் நினைவுகூரும் வகையில் அமைகிறது.





முதல்கட்டமாக, 03.05.2023 அன்று ரூபா 627,187.39 பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்புச் செய்த அவர்கள், இரண்டாம் கட்டமாக 21.01.2025 அன்று ரூபா 785,219.75 பெறுமதியான மேலும் பல நவீன உபகரணங்களை வழங்கியுள்ளனர். இந்த அன்பளிப்புகள், மாணவர்களின் படைப்பாற்றலையும், ஒளிப்படக் கலையில் அவர்களின் திறனையும் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறப்பாகக் கூறப்பட வேண்டியது என்னவெனில், இந்த உபகரணங்கள் மூலம்




மாணவர்கள் தங்களுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவையும், பிராயோகிக அனுபவத்தையும் பெற முடியும். ஒளிப்படக்கலையகத்தின் வசதிகள் மேம்படுவதன் மூலம் மாணவர்கள் போட்டிகள் மற்றும் நிகழ்வுகளில் சிறந்து விளங்குவதற்கான வழிகாட்டியாகவும் அமையும்.

அமரர் சிவயோகநாதன் அவர்களின் பணியையும், அவரின் புதல்வர்கள் காட்டிய தந்தைநினைவு அன்பையும் கண்டு கல்லூரி சமூகமும், பழைய மாணவர்கள் கூட்டணியும் பெருமைப்படுகின்றன. இந்த உதாரணம் மற்றோரு தலைமுறையினருக்கும் சமூகப் பொறுப்புணர்வைக் கற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. அமரர் சிவயோகநாதன் அவர்களின் நினைவு நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் விதமாக, இந்த அன்பளிப்புகள் தொடர்ந்து பல மாணவர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைய வல்லன. அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட ஒளிப்படக்கலையகம், எதிர்கால சாதனையாளர்களை உருவாக்கும் தூணாக விளங்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.



# திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் திருப்பணி தொடர்பாக மீண்டும் இந்திய தூதுவரகத்தினருடன் ஆராய்வு



திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் திருப்பணி தொடர்பாக மீண்டும் இந்திய துாதுவரகத்தினருடன் ஆராய்வு

திருக்கோணேஸ்வரம் ஆலயம், தொன்மை மிக்க ஈசனின் புண்ணிய தலம் மட்டுமல்லாமல், தமிழரின் மத, கலாச்சார அடையாளமாகவும் சிறப்புப் பெறுகிறது. இத்தகைய சிறப்புடைய ஆலயத்தின் எதிர்காலத் திருப்பணி தொடர்பாக ஆராயும் நோக்கில், 08.03.2025 அன்று இந்திய தூதுவரகத்தின் உயர் அதிகாரிகள் ஆலயத்திற்கு விஜயம் செய்தனர். அவர்களின் வருகை, ஆலயத்தின் மேம்பாடு தொடர்பாக இந்திய அரசின் அக்கறையையும் ஆதரவையும் வெளிப்படுத்தியது.

இந்த சந்திப்பில், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு.திருமுருகன், ஆலய நிர்வாக சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு ஆலயத்தின் தற்போதைய நிலைமை, திருப்பணிகளுக்கான தேவைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாகக் குறிப்பிட்டனர். அதிகாரிகள் ஆலய நிர்வாகத்தினரிடமிருந்து பல்வேறு விடயங்களை கேட்டறிந்து, தேவைகளை சற்று நெருக்கமாக உணர்ந்து கொண்டனர்.

முக்கியமாக, கோணேஸ்வரத் திருப்பணிகளுக்கான நிதி உதவி குறித்தும், இந்திய பிரதமரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை பற்றியும் விவாதிக்கப்பட்டது. இந்த கோரிக்கையினை இந்திய அரசியல் வட்டாரங்களில் சிறப்பு அக்கறையுடன் பரிசீலித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தது, திருக்கோணேஸ்வரம் பக்தர்களிடையே நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசின் ஆதரவு கிடைத்தால், திருப்பணிகள் வேகமாக முன்னேறி, திருக்கோணேஸ்வரம் ஆலயம் மேலும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. இது மட்டும் அல்லாமல், இந்தியா - இலங்கை உறவுகளுக்கும் புதிய தடம் பதிக்கும் நிகழ்வாக அமைந்துள்ளது.

அதிகாரிகளின் இந்த வருகை, திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் எதிர்காலத்தின் மீது புதிய ஒளியையும் நம்பிக்கையையும் பரப்பியிருக்கிறது. இந்த புண்ணியத் தலம், தமிழ் சமயச் சின்னமாக மேலும் பல தலைமுறைகளுக்கு ஆதரவாக திகழ்வதை உறுதிசெய்யும் விதமாக, எதிர்காலத் திருப்பணிகள் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.



## மிகச்சிறப்பாக நடைபெறப்போகும் 6ஆவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாடு

சைவசித்தாந்தம், தமிழர்களின் ஆன்மிக மரபின் அடையாளமாக விளங்குகிறது. அதன் முக்கியத்துவத்தை உலகளாவிய அளவில் எடுத்துரைக்க, தருமையாதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் இணைந்து, 6ஆம் ஆண்டு அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டை நடத்துகின்றன. இம்மாநாடு 2025 மே 3, 4, 5 ஆகிய தேதிகளில் சென்னை காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ். ஆர்.எம். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற உள்ளது.


இந்த மாநாடு, "சங்க இலக்கியங்கள் முதல் சமகால இலக்கியம் வரை சித்தாந்தப் பதிவுகள்" என்ற பொதுத் தலைப்பின் கீழ் நடைபெறுகிறது. இதன் மூலம், சைவசித்தாந்தத்தின் வரலாறு, வளர்ச்சி, அதன் தற்போதைய நிலை ஆகியவற்றை ஆய்வு செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. மாநாட்டில், சைவ ஆதீனங்களின் குருமகா சன்னிதானங்கள், அரசியல் தலைவர்கள், நீதிபதிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், சைவ சமய அறிஞர்கள், மற்றும் உலகின் பல நாடுகளிலிருந்து ஆய்வாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

மாநாட்டில் பங்கேற்பது விரும்பும் அன்பர்கள் முன்பதிவு செய்ய வேண்டும். இது, மாநாட்டின் ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய உதவும். முன்பதிவு செய்ய விரும்புவோர், மாநாட்டின் அதிகாரப்பூர்வ இணையதளம் அல்லது தொடர்பு எண்ணங்களை பயன்படுத்தி பதிவு செய்யலாம். இந்த மாநாடு, சைவசித்தாந்தத்தின் ஆழமான கருத்துகளை அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பு. அன்பர்கள் அனைவரும் இதில் பங்கேற்று, ஆன்மிக அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுகிறோம்.



# பக்தி மயமாக நிகழ்ந்த மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம்





இலங்கையின் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், அதன் வருடாந்த மகோற்சவத்திற்காக பிரசித்திபெற்றது. இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா வருடந்தோறும் மாசி மாதம் மக நட்சத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், அதன் அமைப்பாலும், பக்தர்களின் ஆழ்ந்த பக்தியாலும் தனித்துவம் பெற்றுள்ளது. இந்த ஆலய திருவிழாக்கள் பெருமளவில் பக்தர்களை ஈர்க்கும் தன்மை கொண்டவை. முக்கியமாக, தேர்த்திருவிழா என்பது ஆண்டுதோறும் மிகுந்த பக்தி பரவசத்துடன் சிறப்பாக நடைபெறும். இந்த ஆண்டிற்கான தேர்த்திருவிழா, வழக்கம்போல் கொடியேற்றத்துடன் தொடங்கியது. மாசி மகத்தன்று, அதாவது 12.03.2025 அன்று, தேரோட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.




நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஒன்று திரண்டு, அம்மன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். இந்த விழாவில் பக்தர்கள் அம்மனின் அருளைப் பெற தங்கள் குடும்பத்தினருடன் வந்து கலந்துகொண்டனர். மகளிர், குழந்தைகள், முதியோர் என அனைவரும் பக்தி நிறைந்த மனதுடன் பங்கேற்று, அருள் பெற வழிபட்டனர்.



# திருமுருகண்டி பிள்ளையார் ஆலய நிர்வாக குழுவின் புதிய தலைவராக செஞ்சொற்செல்வர் நியமிக்கப்பட்டார்

திருமுருகண்டி பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாக குழுவின் தலைவராக தெல்லிப்பழை தூர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.


கடந்த 19.12.2024 அன்று புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற இந்துப் பண்பாட்டு நிதியத்தின் ஆளுநர் சபைக் கூட்டத்தில், இந்து மத ஆலயங்கள் இந்துப் பண்பாட்டு துறையின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, திருமுருகண்டி பிள்ளையார் ஆலய நிர்வாகத்திற்காக ஒரு புதிய நிர்வாகக் குழுவை உருவாக்க தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், சிறந்த வழிநடத்தல் மற்றும் அனுபவம் கொண்ட செஞ்சொற்செல்வர் அவர்கள் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நியமனம் ஆலய நிர்வாகத்தை மேலும் முறையாக செயல்படுத்தவும், பக்தர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.




# பக்திமயமாக இடம்பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் மாசி மகா மக உற்சவம்







யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், அதன் ஆன்மிக மகிமையால் பிரசித்தி பெற்றது. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் (பிப்ரவரி-மார்ச்) நடைபெறும் மாசி மகம் திருவிழா, இவ்வாலயத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும். இந்த ஆண்டு (2025) மகா மகம் நிகழ்வாக மாசி மகம் வந்ததால், விழாவின் சிறப்பு மேலும் அதிகரித்தது.




மகத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் பத்து தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெறுவது வழக்கம். மாசி மகம் அன்று, துர்க்கா புஷ்கரணி தீர்த்த கேணியில் அம்மன் நீராடுவது வழமை. இந்த ஆண்டு, மாசி மகம் (மகா மகம்) அன்று, காலை தீர்த்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றது. பெருமளவு பக்தர்கள் பால்குடங்களை ஏந்தி, துர்க்கை அம்மனுக்கு அபிஷேகம் செய்து, தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.









# சட்டத்தரணி கே.வி.ஸ்ரீ கணேஷராஜனால் எழுதப்பட்ட சட்டத்துறை சார்ந்த இரு நூல்களின் வெளியீடு





நாட்டின் சட்டத்துறைக்கு வலுச்சேர்க்கத்தக்க வகையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.ஸ்ரீ கணேஷ்ராஜனினால் எழுதப்பட்ட இரண்டு சட்ட நூல்கள் பிரதம நீதியரசர் உள்ளடங்கலாக நாட்டின் சட்டத்துறைசார் வல்லுனர்கள் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (30) வெளியிட்டுவைக்கப்பட்டது.

சட்டத்தரணி கே.வி.ஸ்ரீ கணேஷ்ராஜனினால் எழுதப்பட்டிருக்கும் Cases and Materials on Law of Trusts (நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் விடயதானங்களும், தீர்க்கப்பட்ட வழக்குகளும்) மற்றும் Cases and Materials on Charitable Trusts (தர்ம நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் விடயதானங்களும், தீர்க்கப்பட்ட வழக்குகளும்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவும், சிறப்பு அதிதியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் கலந்துகொண்டதுடன் இவ்விரு நூல்களின் உள்ளடக்கம் தொடர்பில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கே.கனக ஈஸ்வரனால் விளக்கமளிக்கப்பட்டது. அதேவேளை மேற்குறிப்பிட்ட இரு நூல்களும் முறையே நாட்டின் பிரபல சட்டத்தரணிகளான மறைந்த ஏ.ஆர்.சுரேந்திரன் மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகியோருக்கு நூலின் எழுத்தாளர் கணேஷ்ராஜனால் சமர்ப்பணம் செய்யப்பட்டது.



நீதியரசர் எஸ்.துரைராஜா

அதன்படி நிகழ்வின் தொடக்கத்தில் உரையாற்றிய நீதியரசர் எஸ்.துரைராஜா, நீண்டகால உழைப்பின் பின்னர் இவ்விரு நூல்களும் வெளிவந்துள்ளமையையிட்டு தனது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் வெளிப்படுத்தினார். அதேபோன்று இந்த இரண்டு நூல்களையும் சமர்ப்பணம் செய்வதற்கு ஏ.ஆர்.சுரேந்திரன் மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகிய இருவரை தவிர வேறு யாரும் மிகப் பொருத்தமானவர்களாக இருக்கமுடியாது எனக் குறிப்பிட்ட அவர், இந்நூல்களில் அதன் உள்ளடக்கம் சார்ந்த வரலாறு மிகவும் ஆழமாக ஆராயப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும் எனத் தெரிவித்தார்.



அதனைத் தொடர்ந்து மேற்படி இரு நூல்களின் பிரதிநிதிகள் சட்டத்தரணி கணேஷ்ராஜனால் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. அதேபோன்று ஏ.ஆர்.சுரேந்திரனின் துணைவியார் ரேணுகாதேவி சுரேந்திரன் மற்றும் கந்தையா நீலகண்டனின் துணைவியார் சசிதேவி நீலகண்டன் ஆகியோர் நீதியரசர் துரைராஜாவிடமிருந்து நூலின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக ஈஸ்வரன்

அதன்பின்னர் நூலின் உள்ளடக்கம் பற்றி சுருக்கமாக விளக்கமளித்த சிரேஷ்ட சட்டத்தரணி கனக ஈஸ்வரன், இரு புத்தகங்களும் ஆராயும் நம்பிக்கைப்பொறுப்பு சட்டம், தர்ம நம்பிக்கைப்பொறுப்பு சட்டம் என்பன இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம், அவற்றுடன் தொடர்புடைய வழக்கு தீர்ப்புகள், இந்தியா மற்றும் இங்கிலாந்தில் இச்சட்ட நடைமுறைகள், அவற்றின் பின்னணி உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்களை இந்நூல்கள் உள்ளடக்கியிருப்பதாகக்



குறிப்பிட்டார். அத்தோடு நாட்டின் சட்டத்துறை சார்ந்த நூல்களில் இவை இரண்டும் மிகமுக்கியமான வளமாக அமையும் எனவும் அவர் பாராட்டு வெளியிட்டார்.

**இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா**

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, "நீங்கள் (நிகழ்வில் கலந்துகொண்ட சட்ட வல்லுனர்கள்) தினமும் சட்டம் பயில்வது போல, இந்தியா - இலங்கைக்கு இடையிலான நல்லுறவில் நான் தினமும் புதிய தொடர்புகளைக் காண்கிறேன்" எனத் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட கருத்துக்களின் பிரகாரம், இரு நாடுகளுக்கும் இடையில் பல தசாப்த கால சட்டத்துறைசார் தொடர்புகள் மற்றும் பரஸ்பர ஒற்றுமைகள் நிலவிவந்திருப்பது குறித்து அவர் தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.

அதேபோன்று சமகாலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, டிஜிட்டல் தொடர்பு மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்பு என்பன மேலோங்கியிருப்பதாகவும், இத்தொடர்புகள் மற்றும் புதிய திட்டங்கள் மூலம் அடுத்த 5 - 10 வருடங்களில் இலங்கைக்கு பல பில்லியன் டொலர் வருமானம் கிட்டும் எனவும் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.
நிறைவாக நன்றியுரை ஆற்றிய மேற்குறிப்பிட்ட இரண்டு நூல்களின் எழுத்தாளர் சட்டத்தரணி கே.வி ஶ்ரீ கணேஷ்ராஜன், தனது தொழிற்துறை வளர்ச்சியில் மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர்.சுரேந்திரனின் பங்களிப்பை உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்ததுடன், இந்நூல்கள் வெளிவருவதற்கு உதவிய சகலருக்கும் நன்றி தெரிவித்தார்.





# மாவட்ட மட்ட போட்டிகளில் கலந்து கொண்ட சிவபூமி பாடசாலை மாணவர்கள்



யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து 2025 பெப்ரவரி 14ஆம் திகதி நடாத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட போட்டியில் எமது கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

சிறுவர் மனவிருத்திப் பாடசாலையாக கலாநிதி ஆறு.திருமுருகனால் நிறுவப்பட்ட சிவபூமி பாடசாலை மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வி, கலை, விளையாட்டு மற்றும் சமூக உளச்சூழலை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. இந்த பாடசாலை, தேசிய மட்டத்தில் சிறந்த மனவிருத்தி பாடசாலையாகவும், சர்வதேச ரீதியிலான சிறப்புத் தேவைக்குரிய மாணவர்களின் ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தடவைகள் கிறீஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பங்கேற்று பதக்கங்களைப் பெற்று, இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளது.

சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் மாணவர்களின் இச்சாதனைகள், அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும், சமூகத்தில் அவர்களின் இடத்தை உறுதி செய்வதற்கும் உறுதுணையாக இருக்கும். இது, அவர்களின் திறமைகளை மேலும் வளர்க்கும் ஊக்கமாகவும், சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் உதவியாகவும் இருக்கும்.



# கல்வி சுற்றுலா சென்ற சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள்



2025 பெப்ரவரி 21ஆம் திகதி, எமது சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள் கல்வி சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு முக்கிய இடங்களைப் பார்வையிட்டனர்.

இந்த கல்வி சுற்றுலா, மாணவர்களின் அறிவை விரிவுபடுத்துவதோடு, அவர்களின் சமூக மற்றும் கலாச்சார அறிவையும் வளர்த்தது. மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்று, புதிய அனுபவங்களை பெற்றனர்.











# யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பெருந்தோட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு




பெருந்தோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 62 அதிபர்களுக்கான இரு நாள் வதிவிட செயலமர்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மார்ச் மாதம் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் சிறப்பாக இடம்பெற்றது. கல்வி அமைச்சின் பெருந்தோட்டப் பாடசாலை பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்ட இச்செயலமர்வில், அதிபர்கள் பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளையும் நேரில் களத்தரிசிப்பதன் மூலம் அறிவை விரிவுபடுத்தும் வாய்ப்பைப் பெற்றனர்.

யாழ் இந்துக் கல்லூரியின் கல்வி, ஒழுங்குமுறை, நிர்வாகம், மாணவர்களின் செயற்பாடுகள், வளங்கள் மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான புதிய முயற்சிகள் பற்றிய பார்வை வழங்கும் வகையில் செயலமர்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, அனுபவம் மிக்க வளவாளர்கள் கல்வி நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி, தரம் உயர்த்தல் மற்றும் தலைமையின் பொறுப்புகள் குறித்த விரிவான கருத்துரைகளை வழங்கினர்.

இச்செயலமர்வு பெருந்தோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்தவும், நிர்வாக திறனை

வலுப்படுத்தவும், செயற்பாடுகளை திட்டமிடவும் வழிகாட்டியாக இருந்தது. இது அதிபர்களுக்கு புதிய அனுபவங்களை வழங்கி, பாடசாலையின் மேலாண்மையில் புதுமையான உத்திகளை செயல்படுத்த ஊக்கமளிக்கின்ற ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்வாக அமைந்தது.











# 118ஆவது வடக்கின் பெருஞ் சமரில் சென்.ஜோன்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி



Colombo (News 1st) யாழ். மத்திய கல்லூரிக்கு எதிராக 118ஆவது வடக்கின் பெருஞ் சமரில் சென்.ஜோன்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. யாழ். மத்திய கல்லூரி நிர்ணயித்த 93 ஓட்டங்கள் இலக்கை சென்.ஜோன்ஸ் அணி 5 விக்கெட் இழப்புக்கு கடந்தது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம்(5) ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 131 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அன்டன் நிரேஷான் அபிஷேக் 27 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றதுடன் அணித்தலைவர் ரஞ்சித்குமார் நிவ்டன், சதாகரன் சிமில்டன் ஆகியோர் தலா 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜெயச்சந்திரன் அஷ்நாத் 5 விக்கெட்டுகளையும், மர்பின் ரெண்டியோ, குகதாஸ் மாதுளன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். முதல் இன்னிங்ஸில் பதிலளித்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 181 ஓட்டங்களைக் குவித்து சவால் விடுத்தது. ரேமன் அனுஷாந்த் 86 ஓட்டங்களை விளாச ஜெயச்சந்திரன் அஷ்நாத் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரஞ்சித்குமார் நியூட்டன் 5 விக்கெட்டுகளையும், முரளி திசோன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 50 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களால் மீண்டும் பிரகாசிக்க முடியவில்லை.

சுதாகரன் சிமில்டன் 34, தகுதாஸ் அபிலாஷ் 28 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க யாழ். மத்திய கல்லூரி அணியின் இரண்டாம் இன்னிங்ஸ் 142 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.ஜெயச்சந்திரன் அஷ்நாத் 3 விக்கெட்டுகளையும்,

குகதாஸ் மாதுளன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். வெற்றி இலக்கு 93 ஓட்டங்களாக நிர்ணயிக்கப்பட அந்த இலக்கை நோக்கி பதிலளித்தாடிய சென்.ஜோன்ஸ் அணி ஓர் ஓட்டத்துக்கு 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றத்திற்குள்ளானது. எனினும், உதயணன் அபிஜோய்ஷாந்த் 34 ஓட்டங்களையும், ஜெயச்சந்திரன் அஷ்நாத் 29 ஓட்டங்களையும் பெற்று வெற்றியை உறுதிசெய்தனர். முரளி திசோன், ரஞ்சித்குமார் நியூட்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

வடக்கின் பெருஞ் சமர் வரலாற்றில் சென். ஜோன்ஸ் அணி தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றிபெற்றுள்ளதுடன் இது அவர்களுக்கு 40ஆவது வெற்றியாகும். யாழ். மத்திய கல்லூ ரி அணி 29 வெற்றிகளை பெற்றுள்ளதும் நினைவுகூரத்தக்கது. சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை சென் ஜோன்ஸ் அணியின் ரேமன் அனுஷாந்தும் சிறந்த பந்துவீச்சாளர் விருதை ஜெயச்சந்திரன் அஷ்நாத்தும் வென்றனர்.

யாழ். மத்திய கல்லூரி அணியின் அன்டன் நிரோஷன் அபிஷேக் சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவானார் யாழ். மத்திய கல்லூரியின் ரஞ்சித்குமார் நியூட்டன் சிறந்த சகலதுறை வீரர் விருதை தட்டிக்கொண்டார்.சிறந்த விக்கெட் காப்பாளர் விருது சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கிருபாகரன் சஞ்சுதனுக்கு கிட்டியது. போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது சென்.ஜோன்ஸ் அணியின் ஜெயச்சந்திரன் அஷ்நாத் வசமானது.



இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(பங்குனி-2025) ISBN-978-955-7420-00-4